[திரு. கே. கந்தசாமி] [1979 ஏப்ரல் 21

உசிலம்பட்டியில் ஒரு பின்தங்கிய பகுதியாகும். ஏற்கெனவே நான் அங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் மாதவன் அவர்கள் 2 கோடி ரூபாயில் ஒரு நவீன நூற்பாலையை—கோபிஸ்டிகேடட் மில் — 25 ஸ்பின்டில்கள் கொண்டு ஆரம்பிக்கப்படும் என்று இதே மன்றத்தில் அறிவித்தார்கள். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்த நவீன நூற்பாலை திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும், அந்தப் பகுதி மக்கள் வறுமையில் வாடுகிறார்கள், அந்த வாட்டத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மானியத்திற்கு சம்பந்தம் இல்லாததாக இருந்தாலும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களிடத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது உசிலம்பட்டி, திருமங்கலம் போன்ற பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு தண்ணீர் கொடுக்கவேண்டும். இப்போது நடந்துகொண்டிருப்பது இன்டஸ்ட்ரீஸ் மானியம் என்பது தெரியும், இருந்தாலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்காகக் கூறிக்கொள்கிறேன். 20 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று இருந்தாலும் ஒரு 6 ஆயிரம் ஏக்கருக்கு என்றுதான் இப்போது அறிவித்திருக்கிறீர்கள். இதை ஒரு முதல் கட்ட அறிவிப்பாகக் கருதுகிறேன். ஆகவே இதை முதல்கட்டமாகக் கொண்டு இன்னும் 14 ஆயிரம் ஏக்கருக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று 4 இலட்சம் மக்களின் சார்பாகக் கேட்டுக் கொண்டு 6 ஆயிரம் ஏக்கருக்கு வழங்கப்பட்டதற்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்து இந்தத் திட்டத்தை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, ஏப்ரல் திங்கள் 23ம் நாள் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

147. தமிழ்நாடு 1978–ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலை நடத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊரகவளர்ச்சி — உள்ளாட்சித் துறையின் 31 - 1 - 1979 ஆம் தேதியிடப்பட்ட அரசாணை எண். 165-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V / 1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது].

1979 ஏப்ரல் 21]

148. தமிழ்நாடு 1957 - ஆம் ஆண்டு திரை அரங்குகள் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் (திரை அரங்குகள்) 31 - 8 - 1978 ஆம் தேதியிடப்பட்ட அரசாணை எண். 2134—ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு திரை அரங்குகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் நாடு சட்டம் IX/ 1955) 10 (3) பிரிவின் கீழ் (தமிழ் பேரவை முன் வைக்கப்பட்டது

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

176. 28-3-1978 ஆம் தேதியன்று பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பினை எதிர்த்துக் குரலெழுப்பிய திரு. துரைமுருகன் அவர்கள் மீதான அவையுரிமை வழக்கு, மற்றும் திரு. துரைமுருகன் அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாளன்று சில பெயர்கள் பொறிக்கப்பெற்ற இரண்டு அலுமினியத் தட்டுக்களை பேரவையில் காண்பித்தது தொடர்பான உரிமை மீறல் வழக்கு ஆகியவற்றின் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கைகள்.

* 177. கோரிக்கை எண். 43 – பல்வகை - கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்கும் குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் புது வாழ்வும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 — 80 (தமிழ், ஆங்கிலம்)

* 178. 1979 – 80 ஆம் ஆண்டில் மறுவாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்)

* * 179. கோரிக்கை எண். 24 - தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 - 80 (தமிழ், ஆங்கிலம்).

* * 180. 1979 - 80 ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

* * 181. கோரிக்கை எண். 37 - பொதுப்பணிகள் — கட்டடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 — 80 (தமிழ், ஆங்கிலம்).

* * 182. கோரிக்கை எண். 42 - ஓய்வூதியங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1979 - 80 (தமிழ், ஆங்கிலம்).

* * 183. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20 / 1979).

* * 184. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை (சட்டமுன் வடிவு எண். 21 / 1979).

---

கோரிக்கை எண்கள். 24, 51 - க்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 20-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

* 19-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

* * 20-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.